மேல்பென்னாத்தூர் ஊராட்சிமன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு. A. விஜய் அவர்கள்

ந.க: 02/2024 நாள்: 16.03.2024

பொருள் : மனைப்பிரிவு திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் மேல்பென்னாத்தூர் ஊராட்சி கிராம புஞ்சை சர்வே எண்.69/1A2B (ம) 69/1B2B ஆகியவற்றில் 0.40.ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுகான ஒப்புதல் இசைவு உதவி இயக்குநர் மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலர் அவர்கள் பரிந்துரை ஏற்று மனைப்பிரிவுகளாக அங்கீகரிக்க என இசைவளித்து உத்தரவிடல் சார்பு.

பார்வை :
1. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களின் ந.எண் I8F80HB5/2024/TCP, நாள்: 28/02/2024
2. செங்கம் சார் பதிவாளர் தானப்பத்திரப்பதிவு ஆவண எண்.1327/2024, நாள்: 23.02.2024
3. மேல்பென்னாத்தூர் ஊராட்சி மன்ற தீர்மானஎண்: 15/2023-24, நாள்: 16/03/2024
4. அரசாணை நிலை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3) துறைநாள்: 04.05.2017

*****

உத்தரவு :

பார்வை 1-ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மா.வ./ந.ஊ.இ.(தி.மலை) எண் I8F80HB5/2024/TCP நிபந்தனைகளின் படி சரத்து எண். 9ன்படி புதியவீட்டு மனை அமைய உள்ள கீழ்க்கண்ட சர்வே எண்.69/1A2B (ம) 69/1B2B எண்களின் 1620 சதுர மீட்டரில் ரோடு தானம் எண் 1327/2024 நாள்: 23.02.2024 தானம் போக மீதமுள்ள 1174.8 சதுர மீட்டர் அடிப்படையில் இடம் பெற்றுள்ள மூல ஆவணங்கள் மற்றும் வில்லங்கச் சான்றுகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் மேலும் விதிஎண்.9 இன்படி அனுமதி கோரும் இடத்தின் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக அரசாணை எண்.79 இன்படி வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ. 4(3)) துறை நாள் 04.05.2017-ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

(DTCP) திருவண்ணாமலை Layout 56/2024 நாள்: 28.02.2024 என்ற அனுமதி எண் மூலம் வழங்கப்பட்டுள்ள தொழில் நுட்ப மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள மனை எண்கள் 1 முதல் 12 ஆகிய மனைகள் நில மேம்பாட்டாளர் பத்திரப்பதிவு அலுவகத்தில் விற்பனை செய்துகொள்ள ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

பார்வை 3ல் காணும் ஊராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேல்பென்னாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள **எம்.ஜி.ஆர் நகர்** மனைகள் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவாக கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உத்திரவிடப்படுகிறது

1) பார்வை 2ல் காணும் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது இடங்களில் அத்துமீரல் இருக்கக் கூடாது.
2) விற்பனை செய்யும் மனைகளில் புதியகட்டிடங்கள் கட்டும் போது ஊராட்சி அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்படவேண்டும் என மனை பெறும் நபர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

ஊராட்சிமன்றத் தலைவர்
மேல்பென்னாத்தூர் ஊராட்சி
செங்கம் ஒன்றியம்

பெறுநர்:-

M.K.ஏழுமலை,
NO: 124 மினிடேங்க் தெரு,
மேல்பென்னாத்தூர்,
செங்கம் (வட்டம்),
திருவண்ணாமலை (மாவட்டம்),
அ.கு.எண் 606704.

நகல்: உதவி இயக்குநர் அவர்கள்,
மாவட்டநகர ஊரமைப்பு அலுவலம்,
27, மணலூர்பேட்டை சாலை,
திருவண்ணாமலை.

Scanned with CamScanner